கோரப்படுகிறது. அந்த வகையில் நிறைவுசெய்துகொள்ளுவதற்கு அனுமதி கேட்பார்களானால், இரண்டு துறைக்கும் நானே அமைச்சராக இருக்கிற காரணத்தால், அனுமதி அளிக்கத் தயாராயிருக்கிறேன். அதற்கான முயற்சியை அந்த நகராட்சிமன்றம் மேற்கொள்ள வேண்டும் என்ற அளவுக்கு கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(2) Exorbitant price charged for sugar in the open market and the consequent distress caused to drug industry in State.

Thiru G. SWAMINATHAN: I wish to call the attention of the Hon. the Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the exorbitant price charged for sugar in the open market and the consequent distress caused to the Drug Industry in the State.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சர்க்கரை விலை, போக்குவரத்து வழங்கல் மீதுள்ள கட்டுப்பாட்டை இந்திய அரசு 25—5—1971 முதற்கொண்டு நீக்கியது. சர்க்கரையின் இருப்பு வழங்கல் நிலை அப்பொழுது மனநிறைவளிப்பதாக இருந்ததே இதன் காரணமாகும். 1972-ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி குறைந்ததனாலும், ஆலைகளிலிருந்து சர்க்கரை குறைந்த அளவில் வெளியிடப்பட்டதனாலும் அங்காடி விலையைப் பாதித்து துணிகர வியாபாரத்திற்கு வழி வகுத்தது எனத் தோன்றுகிறது. எனவே, 1971 அக்டோபர் திங்களில் சர்க்கரை விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 180 ஆக இருந்திருக்க, இவ்விலை 1971 டிசம்பர் இறுதிக்குள் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 500 ஆக உயர்ந்தது. 1971 டிசம்பர் திங்களில் இந்த அரசு இம்மாநிலத்தில் உள்ள ஆலைகளின் இசைவுடன், ஆலைகள் விற்பனைக்காக வெளியிடும் சர்க்கரையில் 10 சதவிதத்தை 1971 டிசம்பர் திங்களில் எடுத்துக்கொண்டு, அதனை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்தது. 1972 ஜனவரித் திங்கள் முதற்கொண்டு இந்திய அரசு ஆலைகளுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டிற்கிணங்க, ஒவ்வோர் ஆலையிலிருந்தும் வெளியிடப்படும் சர்க்கரையில் 60 சதவிதத்தை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150 வீதம் ஆலை வாயில் விலையில் வழங்குவதற்காக, எடுத்துக்கொண்டுள்ளது. 1972 ஜனவரித் திங்களில் இம்மாநிலத்திற்கு 9,800 டன்னும் 1972 பிப்ரவரித் திங்களுக்காக 9,700 டன்னும் ஒதுக்கப்பட்டன. கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதம் மாநிலமெங்கனும் ஒரு சீராகப் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதற்காக அரசு சர்க்கரையை அனுமதி பெற்ற சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் வெளியிடுகின்றது.

நியாயமான அளவில் சர்க்கரை வழங்கப்படுவதற்காக இம்மாநிலத்தில் உள்ள குடும்பங்கள் அனைத்துக்கும் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஏற்பாட்டின் கீழ் மாநிலம் முழுவதிலும் குடும்பம் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் சர்க்கரை பகிர்ந்தளிக்கப்படுவதற்கு வகை செய்யப்படுகிறது. அதிக வருவாய் உள்ள குடும்பத்தினர் பொதுவாக அதிக அளவு சர்க்கரையைப் பயன்படுத்துகின்றனர். இவர்களுக்கு 2 முதல் 3 கிலோ வரையில் பங்கீட்டு அளவை அதிகரிப்பதற்காக இதில் சிறிதளவு மிச்சப்படுத்தப்படுகிறது. அதிக வருவாய் உள்ள குடும்பங்களின் முழுத் தேவையையும் அரசால் ஈடுசெய்ய

இயலாது. அவர்கள் தங்கள் தேவைகளை வெளி அங்காடியிலிருந்து தான் பெற வேண்டும். ஆலைகளால் வெளியிடப்படும் சர்க்கரையில் 40 சதவீதம் அவற்றால் நேரடியாக விற்பனை செய்யப்படுகின்றது. மொத்தமாக சர்க்கரையைப் பயன்படுத்துவோர் தங்கள் தேவைகளை வெளி அங்காடியிலிருந்து தான் பெற வேண்டும். வெளி அங்காடி விலை தற்போது குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 250 ஆகக் குறைந்துள்ளது.

***திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்ததற்கு முக்கியமான காரணம், மருந்துகளின் விலைகள் எல்லாம் கட்டுப்படுத்தப்பட்டு ஒரு அளவுக்குமேல் விலை வைத்து விற்கக் கூடாது என்ற நிலையை மத்திய அரசால் செய்யப்பட்டிருக்கிறது. மருந்து உற்பத்தி செய்பவர்களுக்குத் தேவையான அளவு சர்க்கரை கிடைக்காமல் மூட்டை ஒன்று ரூ. 100 வரை அதிகமாக விலை கொடுத்து அவர்கள் வாங்க வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்ய இயலாமல், அவர்கள் மருந்து தயாரிப்பதையே நிறுத்த வேண்டிய துர்பாக்கிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. இதை அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்து, முன்பிருந்ததைப் போல் கோட்டா அளவில் சர்க்கரை ஒதுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அரசாங்கத்திற்கு ஒதுக்கப்படுகின்ற சர்க்கரையை குடும்பங்களில் வாங்கி சொந்தத்துக்கு உபயோகப்படுத்துவதற்கு மட்டும் தான் கொடுக்க முடிவு செய்திருக்கிறது. தனிப்பட்ட நிறுவனங்கள் பயன்படுத்துவதற்குக் கொடுப்பதற்கு அரசிடம் சர்க்கரை இல்லை. இருக்கிற சர்க்கரையே பொது மக்களுக்குப் போதவில்லை என்ற கூக்குரல் இருக்கும்போது, தொழில் நிறுவனங்களுக்குக் கொடுப்பதற்கு இல்லை. விலைகூட குறைந்திருக்கிறது, வித்தியாசம் 50 ரூபாய்தான். நிறுவனங்கள் தாராளமாக வாங்கி அவர்கள் வியாபாரம் செய்வதற்கு ஆட்சேபணை இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நாட்டு மக்களுக்கு மிகவும் தேவைப்படுகிற மருந்துகளின் உற்பத்தியைப் பாதிக்கிற காரணத்தால், அம் மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு சர்க்கரை கொடுப்பதற்கு அரசு முன்வருமா ? முன்பு சர்க்கரை ஆலைகளிலிருந்து 60 சதவீதம் சர்க்கரை அரசு எடுத்துக்கொண்டிருந்தபோது, இந்த நிறுவனங்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்ததையும் அமைச்சர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அப்போது அரசாங்கத்துக்கு வந்த சர்க்கரை அளவு கூடுதலாக இருந்தது. ஆனால் இப்போது வந்திருக்கிற சர்க்கரை அளவு மாவட்டங்களுக்குக் கொடுக்கப் போதுமானதாக இல்லை. ஆனால் கொடுக்கப்பட்ட சர்க்கரை எடுத்துக்கொள்ளப்படாமல், சில மாவட்டங்களில் தேக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இவற்றையெல்லாம் அனுசரித்து, ஒரு மாத காலத்துக்குப் பிறகு, கிராமப் புறங்கள், மற்ற இடங்களில் எவ்வளவு சர்க்கரை பொது மக்களுக்குத் தேவைப்படும் என்ற கணக்கு விவரம் கிடைத்த பிறகு, மேலும் இதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.